**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

C.C. 168/2023

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாண்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. தங்கதேவர்** | **Calling** | : | **வங்கி பணியில் இருந்து பணி ஓய்வு** |
| **Village** | : | **கோட்டூர் ஆவாரம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 62 |
| | | | **Dated** | : | 25.09.2025 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 3), **திரு. பாண்டி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வங்கியில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கின் எதிரி மணிகண்டன் என்பவரைத் தெரியாது. காவல் நிலையத்தில் எதிரியின் பெயர் மணிகண்டன் என்று சொல்லக் கேட்டேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பாக என் மச்சினன் கார்த்திக்கேயனும், அவர் மனைவி கலைவாணியும் இருசக்கர வாகனத்தில் சீலப்பாடியில் இருந்து எங்கள் சொந்த ஊர் கோட்டூர் ஆவாரம்பட்டிக்கு இரவு 09.45 மணிக்கு போய்க்

கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கு முன்பாக நான் எனது இருசக்கர வாகனத்தில் போய்க் கொண்டு இருந்தேன். அப்பொழுது கலைவாணியின் கழுத்தில் போட்டுடிருந்த 3 பவுன் தங்க சங்கிலியை யாரோ அறுத்துக் கொண்டு போய்விட்டார்கள். கலைவாணி உடனே சத்தம் போடவும், கார்த்திக்கேயன் தடுமாறி வண்டியை கீழே போட்டுவிட்டார். அவர்கள் இருவரும் என்னை அலைபேசி மூலமாக அழைத்து தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக தாடிக்கொம்பு காவல் நிலையத்திற்கு போன் மூலமாக தகவல் சொன்னோம். மேற்படி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார். நாங்கள் மூவரும் உடனே தாடிக்கொம்பு காவல் நிலையத்திற்கு சென்று கார்த்திகேயன் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

சம்பவத்தை நான் நேடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சம்பவத்தை கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது, கார்த்திகேயனுக்கு முன்பாக சென்று கொண்டு இருந்ததை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் சொல்லியுள்ளேன். கார்த்திகேயன் என்னுடைய மச்சினன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 25.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

C.C. 168/2023

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. ராஜேஸ்வரி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. பாண்டி** | **Calling** | : | **தையல் வேலை மற்றும் அழகுநிலையம்** |
| **Village** | : | **கோட்டூர் ஆவாரம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 50 |
| | | | **Dated** | : | 25.09.2025 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 4), **திருமதி. ராஜேஸ்வரி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தையல் மற்றும் அழகுநிலையம் வைத்து வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் கார்த்திகேயன் எனது சித்தப்பா மகன். கலைவாணி கார்த்திகேயனின் மனைவி. சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக நானும், என் கணவர் பாண்டியும், கார்த்திகேயனும், அவரது மனைவி கலைவாணியும் தனித் தனியாக இரண்டு இருசக்கர வாகனங்களில் தனித் தனியாக போய்க் கொண்டு இருந்தோம். திண்டுக்கல்க

காட்டாஸ்பத்திரியில் இருந்து எங்கள் வீடு அமைந்துள்ள கோட்டூர் ஆவாரம்பட்டிக்கு செல்லும்போது, ராமயன்பட்டி பெட்ரோல் பங்க் அருகே வந்தபோது, அவர்களுக்கு பின்னால் வந்த யாரோ இரண்டு நபர்கள் கலைவாணியின் கழுத்தில் இருந்த 3 பவுன் தங்க சங்கிலியை அறுத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். கலைவாணி தன் சங்கிலி போய்விட்டது என்று கத்தவும், கார்த்திகேயன் என் கணவரை அலைபேசியில் அழைத்து அவர் அங்கு சென்றார். அவர்கள் விரட்டிக் கொண்டு சென்றார்கள். ஆனால் பிடிக்க முடியவில்லை. அதன்பிறகு தாடிக்கொம்பு காவல்நிலையத்திற்கு சென்று கார்த்திகேயன் புகார் செய்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் முன்னாடி போய்க் கொண்டு இருந்தோம் என்றும், புகார்தாரரும், அவரது மனைவியும் எங்களுக்கு பின்னால் வந்ததை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சம்பவத்தை கேள்விப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கார்த்திகேயன் என்னுடைய தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 25.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.